FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8040853

Under Section 173 BNSS

1. District : புதுக்கோட்டை PS: [illegible] Year: 2025 FIR No.: 02/25 Date: 25.07.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம், 1988 Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: BNSS திருத்தப்பட்டது, 2018 Sections பிரிவுகள்: 106

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 24.7.2025 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 18:00 hours
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.07.2025 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 32 கி.மீ- வடமேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address நாகுடி ஊர் பஞ்சாயத்து அலுவலகம், கரூரை, புதுக்கோட்டை மாவட்டம்.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ச. தெய்வநாதன் (b) Father's/ Husband's Name : சிம்பு
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 01.06.1987 (d) Nationality : இந்தியர் (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தனியார் பட்டதாரி (g) Address : வட்டாட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. மு.மதிவாணன், வயது 50/2025, S/o முத்து, நாகுடி பஞ்சாயத்து அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம்,

2. ராஜா, வயது 50/2025, S/o சின்னப்பன், பாலவேற்றையூர், திருக்கோகர்ணம், கரூரை, புதுக்கோட்டை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26.07.2025

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

பணிந்து அனுப்பப்பட்டது:

நேற்று (24.07.2025)ம் தேதி வியாழக்கிழமை புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து 19.15 மணி முதல் 25.07.2025ஆம் தேதி 01.00 மணி வரை குளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து, இன்று 25.07.2025ஆம் தேதி ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர் திரு.ச.செந்தில், வயது 40/2025, த/பெ சம்பத், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, நேற்று (24.07.2025)ம் தேதி வியாழக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் உள்ள குளத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு மேற்கே அமைந்துள்ள குளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் தனிநபர் ராசு என்பவர் மூலம் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்கள் மற்றும் ஆவண எழுத்தர்களிடம் சார்பதிவாளர் திரு.மகேஷ் என்பவர் லஞ்சம் கேட்டு பெறுவதாக கிடைக்கப்பட்ட ரகசிய தகவலின் அடிப்படையில் எனது தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ஜவஹர் மற்றும் குழுவினருடன் இணைந்து அன்று 19.15 மணி முதல் 25.07.2025ஆம் தேதி 01.00 மணி வரை திடீர் ஆய்வு மேற்கொண்டோம். திடீர் ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தின் மேற்கு பார்த்த வாசலில் நின்று கொண்டிருந்த நபரை விசாரித்த போது அவர் தனது பெயர் ராசு என்றும், சார்பதிவாளர் திரு.மு.மகேஷ் என்பவருக்கு உதவியாக வேலை செய்து வருவதாக தெரிவித்தார், அவரை மேற்குபுற வாசல் மூலம் சார்பதிவாளர் அறைக்கு அழைத்து வரப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தின் தெற்கு பார்த்த வாசல் வழியாகவும், சார்பதிவாளர் அறைக்கு திடீர் ஆய்வுக்குழு வந்தனர். அங்கு தெற்கு பார்த்தவாறு சார்பதிவாளர் மகேஷ் என்பவர் தனது இருக்கையில் அமர்ந்திருந்தார். அப்போது மேற்படி அலுலவகத்தில் ஆஜரில் இருந்த அரசு அலுவலர்கள் மற்றும் தனிநபர்களிடம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் தன்னையும், மேற்படி ஆய்வுக்குழு அலுவலர்களையும் அறிமுகம் செய்து கொண்டு திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்த விபரத்தை கூறி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திடீர் ஆய்வின் போது சார்பதிவாளர் திரு.மகேஷ் என்பவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த ஊதா கலர் காட்டன் ஜீன்ஸ் பேண்ட்டின் வலதுபுற பின்பக்க பாக்கெட்டிலிருந்து பிரவுன் கலர் மணிபர்ஸை எடுத்து அதிலிருந்து ரூ.3,170/–ஐ (500 X 6, 100 X 1, 50 X 1, 20 X 1) ஆஜர் செய்தார். அந்த அலுவலகத்தில் இருந்த தனிநபர்

கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் சார்பதிவாளர் ரூ.3170/– கையிருப்பாக வைத்திருந்ததற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மேற்படி பணம் குறித்து சரியாக விளக்கம் அளிக்காததால் கணக்கில் வராத அந்த பணம் திடீர் ஆய்வுகுழுவால் கைப்பற்றப்பட்டது.

அந்த அலுவலகத்தின் மேற்குபுற வாசலில் இருந்து அழைத்து வரப்பட்ட, அந்த அலுவலகத்தில் சார்பதிவாளருக்கு உதவியாக வேலை செய்து வந்த திரு.ராசு என்பவரை, அவரிடமிருக்கும் பணத்தை ஆஜர் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டது. மேற்படி ராசு தனது ஊதா நிற வேட்டிக்குள் அணிந்திருந்த அரக்கு கலர் டவுசர் மாதிரியான ஜட்டியின் வலதுபக்க பாக்கெட்டிலிருந்து ஆறு கத்தைகளாக பணத்தையும், நான்கு துண்டு சீட்டுகளையும் எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதல் கத்தையில் 62 ஐநூறு ரூபாய் நோட்டுகளும், இரண்டாவது கத்தையில் 6 ஐநூறு ரூபாய் நோட்டுகளும், மூன்றாவது கத்தையில் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 2 இருநூறு ரூபாய் நோட்டுகளும், 2 நூறு ரூபாய் நோட்டுகளும், நான்காவது கத்தையில் 20 ஐநூறு ரூபாய் நோட்டுகளும், ஐந்தாவது கத்தையில் 100 நூறு ரூபாய் நோட்டுகளும், ஆறாவது கத்தையில் 1 நூறு ரூபாய் நோட்டும், 1 ஐம்பது ரூபாய் நோட்டும் ஆக மொத்தம் ரூ.55,750/– (500 X 90, 200 X ?, 100 X 103, 50 X 1) இருந்தது. அதுபற்றி விளக்கம் கேட்க, அவர் கடந்த சில வருடங்களாக சார்பதிவாளருக்கு உதவியாக வேலை செய்து வருவதாகவும், பொதுவாக ஒவ்வொரு நாளும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்ய வருபவர்களிடம் லஞ்சமாக பணம் வாங்கி வைத்திருக்கும்படியும், அந்த பணத்தை சார்பதிவாளர் மகேஷ் வீட்டிற்கு செல்லும்போது அவரிடம் கொடுக்கும்படியும் தன்னிடம் சார்பதிவாளர் மகேஷ் ஏற்கனவே சொல்லியுள்ளார் என்றும், அதேபோல் நேற்று 24.07.2025ஆம் தேதி பத்திரப்பதிவு செய்ய வந்தவர்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்களிடமிருந்தும் ரூ.55,750/–ஐ லஞ்சமாக வசூல் செய்து சார்பதிவாளர் மகேஷ் வீட்டிற்கு சொல்லும் போது அவரிடம் கொடுப்பதற்காக வைத்திருந்தாகவும் கூறினார். மேலும் திரு.ராசு ஆஜர் செய்த 4 துண்டுச்சீட்டுகளில் முதலாவது துண்டு சீட்டில் Document No.798/2025 Registration date என்று எழுதப்பட்டிருந்தது, இரண்டாவது துண்டுச்சீட்டில் VSJ பாலா – 2500.00, சுதாகர் – 500, மண்டையூர் புலத்தணிக்கை 8000, ராஜேந்திரன்–4000, வெங்கடேசன் 2,000, கார்த்தி–3000 என்று எழுதப்பட்டிருந்தது, மூன்றாவது துண்டுச்சீட்டில் பிரபா ACD 4 - 4000 , ரூபன் – 5000 என்று எழுதப்பட்டிருந்தது, நான்காவது துண்டுச்சீட்டில் 3 கி–1கி = 2கி–2000 5– 1 செ–1000, 1 ரத்து – கூடுதல் 3000 மற்றும் Sir 3000 என்று எழுதப்பட்டிருந்தது. ஆகவே மேற்படி 4 துண்டுச்சீட்டுகளும் லஞ்சமாக பெறப்பட்ட பணம் ரூ.55,750/–ம் மேல்நடவடிக்கைக்காக திடீர் ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது.

மேலும் சார்பதிவாளர் அறைக்கு மேற்குபுறம் உள்ள பொதுமக்கள் அமரும் அறையில் தெற்குபுற சுவர் ஓரமாக உள்ள மரத்தாலான சிறிய அலமாரியில் இரண்டாவது ரேக்கில் உள்ள ஆவணங்களுக்கு இடையில் இருந்து கத்தையாக பணம் எடுக்கப்பட்டது. அதில் 50 ஐநூரு ரூபாய் நோட்டுகளும், 1 ஐம்பது ரூபாய் நோட்டும், 1 இருபது ரூபாய் நோட்டும் ஆக மொத்தம் ரூ.25,080/– இருந்தது. அந்த பணத்தை பற்றி சார்பதிவாளர் மகேஷ் என்பவரிடம் விளக்கம் கேட்க, சரியான விளக்கம் அளிக்கவில்லை, அதனால் கணக்கில் வராத மேற்படி பணம் ரூ.25080/– (500 X 50, 50 X 1, 20 X 1, 10 X 1) கைப்பற்றப்பட்டது. அப்போது தனிநபர் திரு.பாண்டி உடனிருந்தார்.

மேலும் சார் பதிவாளர் திரு.மகேஷ் அவர்களிடம் நேற்று 24.07.2025ஆம் தேதி பதிவு செய்த ஆவணங்களை பற்றி கேட்க, 37 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார். அதற்குரிய கணக்குபட்டியலை கேட்க அவர் கணினியிலிருந்து 1) A கணக்கு, 2) D கணக்கு, 3) IP Camera / CD Account , 4) உட்பிரிவு, 5) பிரிவு 41 மற்றும் 6) புள்ளிவிபரக் கணக்கு ஆகியவற்றிற்கான பட்டியல்களை Data Entry Operator திருமதி.சங்கீதா என்பவரால் பதிவிறக்கம் செய்து, அதில் சார்பதிவாளரிடம் கையொப்பம் பெற்று ஆஜர் செய்தார். மேலும் 7) அலுவலக ஊழியர்களின் வருகைப்பதிவேடு (01.01.2025 முதல் 31.12.2025 வரை), 8) டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் வருகைப்பதிவேடு (37 பக்கங்கள்), 9) தணிக்கை வருகை பதிவேடு (01.01.2025 முதல் 31.12.2025 வரை), 10) இயக்கப்பதிவேடு (01.01.2025 முதல் 31.12.2025 வரை), 11) தனிநபர் பண இருப்புப்பதிவேடு (01.01.2025 முதல் 31.12.2025 வரை) மற்றும் 12) தற்செயல் மற்றும் ஈடு செய்யும் விடுப்பு பதிவேடு (01.01.2025 முதல் 31.12.2025 வரை) ஆகியவற்றை சார்பதிவாளர் ஆஜர் செய்தார். அதில் இயக்கப்பதிவேட்டை பார்வையிட்டதில் நேற்று 24.07.2025ஆம் தேதி பகல் 11.00 மணிக்கு கீரனூர் காவல் நிலையம் சென்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளது, ஆனால் திரும்பி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்த நேரம் பதிவு செய்யப்படவில்லை. இது குறித்து சார்பதிவாளர் மகேஷ் என்பவரிடம் விளக்கம் கேட்க, பதிவு செய்யவில்லை என்பதை ஒத்துக்கொண்டார்.

இந்த திடீர் ஆய்வில் 12 ஆவணங்களும், ராசு என்பவர் ஆஜர் செய்த 4 துண்டுச்சீட்டுகளும், கணக்கில் வராத சரியான விளக்கம் கூறாத பணம் ரூ.84,000/–ம் கைப்பற்றப்பட்டது. இன்று 25.07.2025 ஆம் தேதி நான் திடீர் ஆய்வில் 12 ஆவணங்கள், ராசு என்பவர் ஆஜர் செய்த 4 துண்டுச்சீட்டுகள், கணக்கில் வராத சரியான விளக்கம் கூறாத பணம் ரூ.84,000/– மற்றும் சார்பதிவாளர் திரு.மகேஷ், உதவியாளர் திரு.பிரபு, Data Entry Operator திருமதி.சங்கீதா, Camera Operator திரு.மதன்குமார், தனிநபர்களான திரு.ராசு மற்றும் திரு.பாண்டியன் ஆகியோர்கள்

அளித்த எழுத்து மூலமான வாக்குமூலங்கள் ஆகியவற்றை எனது புகார் மனுவுடன் இணைத்து, மேற்படி சார்பதிவாளர் மகேஷ் மற்றும் ராசு மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் இந்த புகார் மனுவை மேல் நடவடிக்கைகாக தங்களிடம் சமர்ப்பிக்கிறேன் ஒப்பம் (திரு.ச.செந்தில், வயது 40/2025, த/பெ சம்பத், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை).

Sir, Received a complaint at 18.00 hrs on 25.07.2025 and registered a case in Pudukkottai V&AC Cr.No.02/2025 u/s 106 BNSS and 7 of Prevention of Corruption Act as Amended Act-2018 against 1) Tr.M.Mahesh, Sub-Registrar, Kulathur, Pudukkottai District, 2) Tr.A.Rasu, S/o Alappan, Keeranur (S/d. J.ஜவஹர், Inspr, V&AC, PDK Dt.25.07.2025)

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனு மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையின் அசல்களை புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

25.7.2025

(ஜ. ஜவஹர்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் சண்முகம்பு பரிவு,
புதுக்கோட்டை.